புதிதாய் மணமான தம்பதிகள் இருவர், மணமகனின் சித்தியின் வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

கலகலப்பாய் அமர்ந்து, அனைவரும் உரையாடிக் கொண்டிருக்கையில் சித்தி, “அருந்துவதற்கு என்ன வேண்டும்? குளிராகவா? சூடாகவா??” என வினவுகிறார்.

இருவருமே, இப்போது எதுவுமே வேண்டாம் என மறுத்து விடுகின்றனர்.

“உன் காதலியின் தேநீர் கூடவா?” என்கிறார் சிரித்துக்கொண்டே சித்தி.

“ஹேய்… அதைப்போய் நான் வேண்டாம் என்பேனா? கொண்டு வாருங்கள்; கொண்டு வாருங்கள்!!” என சிரிக்கிறான் மணமகன்.

தன் கணவனை கோபத்தோடும், கேள்வியோடும் முறைத்துப் பார்க்கின்றாள் புதுமணப்பெண்.

“ஐயோ, மனைவியின் முன் ரகசியத்தை உடைத்து அவனை மாட்டி வைத்துவிட்டாயே!” என நக்கல் செய்து சிரிக்கிறார் சித்தப்பா.

“பயப்பட வேண்டாம் மகள்!! இவன் சிறு வயதில் Zesta விளம்பரத்தை முதன்முதலில் TVயில் பார்த்ததிலிருந்து, அருந்துவது Zesta தேநீர் மட்டும் தான்; போதாததற்கு அவன் Zesta எனும் பெயருள்ள பெண்ணைத்தான் திருமணம் முடிப்பேன் என்பான். அதுதான் அவனை எப்போதும், காதலியின் தேநீர் என கேலி செய்வோம்” என்கிறார் சித்தி.

கலக்கம் நீங்கி, தன் கணவன் மேல் தலைசாய்த்து, அவன் கையினை இறுகப்பற்றிக் கொண்டு புன்னகைக்கின்றாள் மனைவி.

அப்போது அவ்விடத்துக்கு சித்தியின் மகள் தேநீரோடு வந்துவிட, புதுமணத் தம்பதிகள் இருவரும் சத்தமாக வாய்விட்டுச் சிரிக்கின்றனர்.

👑ஷஹாமா இனியாஸ்